திரு. எஸ். ஆஸ்டின்: *நீங்கள் ஏமாந்து போய்விடுவீர்கள் என்பதை மட்டும் நான் சொல்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலே, இது அனைத்துத் தரப்பு மக்களையும் ஏமாற்றிய ஓர் ** அறிக்கைதான் என்பதை இந்த நேரத்திலே சொல்லி விடைபெறுகின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** *என்பதை இந்த அவையிலே பதிவு செய்ய வேண்டாம். வெளியிலே, டி.வி.–யிலே சொன்னதை நீங்கள் இங்கு* repeat *செய்து, பதிய வைக்க முயற்சி செய்ய வேண்டாம். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(13–2–2019)*, புதன்கிழமை காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

45. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுபானம் (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளுக்கு திருத்தம் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் (VIII) துறையின் 30–11–2018 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 77–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

46. அறநிறுவனங்களின் சொத்துகளை நிருவகித்தல் மற்றும் பாதுகாத்தல் விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (அ.நி.4–2) துறையின் 7–12–2018 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 222–ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறநிலைக்

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2019 பிப்ரவரி 12]
கொடைகள் சட்டத்தின் *(தமிழ்நாடு சட்டம் 22/1959) 116(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

47. 2014–2015 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நாற்பத்தொன்றாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு *சட்டம் 36/1972) 35* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ்–ஆங்கிலம்)*

48. 2015–2016 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நாற்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு *சட்டம் 36/1972) 35* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ்–ஆங்கிலம்)*

49. 2016–2017 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1972 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் (தமிழ்நாடு *சட்டம் 36/1972) 35* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] *(தமிழ்–ஆங்கிலம்)*

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–

*****

TRUTH ALONE TRIUMPHS